**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **30.07.2026**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகம் (வேளாண்மைப் பிரிவு) – இளமறிவியல் பட்டப்படிப்புக்கான மாணவர் சேர்க்கை – 2026–27**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் வேளாண் பிரிவில் வழங்கப்படும் இளமறிவியல் பட்டப்படிப்புக்கான இணைய வழி கலந்தாய்வு ஜூலை 9 முதல் 15 வரை நடத்தப்பட்டது. இதில், பொதுப் பிரிவில், மொத்தமாக 5236 இடங்கள் பல்வேறு இளமறிவியல் படிப்புகளுக்கு தற்காலிகமாக நிரப்பப்பட்டது.

இதனையடுத்து ஜூலை 20 ஆம் தேதி 7.5 சதவீத இடங்களுக்கு, தற்காலிக தேர்வு செய்யப்பட்ட 424 விண்ணப்பதாரர்களை சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்பட்டனர். அதேபோல் பொது இட ஒதுக்கீட்டில் தற்காலிக இட ஒதுக்கீடு பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு ஜூலை 22 – 25 வரை நடத்தப்பெற்ற சான்றிதழ் சரிபார்ப்பில் 5236 விண்ணப்பதாரர்களை அழைத்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சான்றுகள் சரிபார்ப்பு நடத்தப் பெற்றது. இதன் அடிப்படையில், தற்போதுவரை, 7.5% ஒதுக்கீட்டிற்கு 103 இடங்களும் பொதுப் பிரிவில் 3235 இடங்களும் நிரப்பப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 7.5 சதவீத ஒதுக்கீட்டில் வீதமுள்ள 321 இடங்களுக்கு விண்ணப்பதாரர்களை தற்காலிக தேர்வு செய்யப்பட்டு சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆகஸ்ட் ஒன்றாம் தேதி அழைக்கப்பட்டுள்ளனர். பொதுப் பிரிவில் ஜூலை 31 வரை சான்றிதழ் சமர்ப்பிப்பதற்கு கடைசி நாள் வரையறுக்கப்பட்டதால் அதைத் தொடர்ந்து மீதமுள்ள இடங்களுக்கு தற்காலிக தேர்வு செய்யப்பட்டு விண்ணப்பதாரர்களை சான்றிதழ் சரிபார்க்க அழைக்க உள்ளோம்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**